

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.11.2023) முகாம் அலுவலகத்தில், சட்டப்பேரவைச் செயலாளர் கி.சீனிவாசன் சந்தித்து, பணி நீட்டிப்பும், முதன்மைச் செயலாளராக பதவி உயர்வும் வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றார்.

### சேலம் இளைஞர்அணி மாநில மாநாட்டிற்கு கழக அடலேறுகளைத் திரட்ட திண்டுக்கல் வருகை!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கருக்காம்பட்டியில் மாபெரும் வரவேற்பு!

### திண்டுக்கல் மாவட்டக் கழகத்தினருக்கு - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!





திண்டுக்கல், டிச.2-

திண்டுக்கல் செயல் வீரர்கள் கூட்டத்துக்கு வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் கருக்காம்பட்டியில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்றிடுமாறு மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவர்களின் அறிக்கை வருமாறு:-

சேலத்தில் டிசம்பர் 17ஆம் நாள் நடைபெறவிருக்கும் 2வது இளைஞர்அணி மாநாட்டில் கலந்துகொள்வதற்கு கழகத் தோழர்களைஅழைக்கவும், இளைஞர்அணி தோழர்களுக்குதந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர்கலைஞர்ஆகியோரின் தத்துவங்களைதமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் அடுத்ததலை முறைக்கு கொண்டுசெல்லும் மாபெரும் பொறுப்பை தனது நெஞ்சங்களில் ஏற்றிக்கொண்டுஅடுத்த தலைமுறைக்குகொண்டு செல்லுகிறசெயல்வீரர்கள் கூட்டம் 04.12.2023,திங்கட்கிழமைகாலை 10.00 மணியளவில்திண்டுக்கல், அஞ்சலிரவுண்டானா, அங்குவிலாஸ் மேல் நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட இளைஞர்அணிதம்பிகளோடு கலந்து பேச வருகை தரும் நீட் தேர்வு விலக்கிற்காக போராடும் இளம் தலைவர், சமூக நீதிக்காக கர்ஜிக்கும் திராவிடப் போராளி, மாநில உரிமைகளை மீட்கவந்த சுடரொளி, நாளும் பொழுதும் மக்கள் நலம் காக்கஉழைக்கும் திராவிடகொள்கையின் அச்சடிப்பு, இளைஞர்அணியின் உச்சரிப்பு, இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் கழக இளைஞர்அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வேடசந்தூர் ஒன்றியம், கருக்காம்பட்டியில் 03.12.2023, ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணியளவில் சிறப்பான வர வேற்பு அளிக்கப்படவுள்ளது.

எனவே, இந்த வரவேற்பு நிகழ்வில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழுஉறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டுகழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட பிரதி நிதிகள், அனைத்து மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்சார்பு அணிஅமைப்பாளர்கள் மற்றும்துணைஅமைப்பாளர்கள், மாநகராட்சிமேயர், துணை மேயர்மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர், துணைத் தலைவர்மற்றும் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந் தலைவர்கள், துணை பெருந்தலைவர்கள் மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள்,துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சிபிரதிநிதிகள், கழகமுன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஏராளமாக கலந்து கொண்டு சிறப்பான தொரு வரவேற்பினை வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



சேலத்தில் 2வது இளைஞர் அணி மாநாட்டினையொட்டி கழக இளைஞரணியினர் மேற்கொண்ட இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி சேலம் மாநாட்டுத் திடலில் நிறைவு பெற்றது. நிறைவு விழா நிகழ்வில் மாநாட்டுத் திடலில் நமது தி.மு.க. ரைடர்கள் தங்களது இரு சக்கர வாகனங்களைக் கொண்டு “மாநில உரிமை மீட்போம்” என்ற முழக்கத்தினை நிலத்தில் அமைத்ததன் கழுகுப் பார்வை. அந்த முழக்க வாகன அமைப்பின் முன் நின்று கழக முதன்மைச் செயலாளர் உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, இருசக்கர வாகன பிரச்சாரக் குழு ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ்மாறன், சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி மற்றும் இளைஞரணி, மாணவரணி, நிர்வாகிகள் கலந்துகொண்டு முழக்கமிட்டனர்.


